# 2022 ஆம் ஆண்டில் மாணவர்கள் இழந்த கற்றல் வாய்ப்புகளை முழுமைப்படுத்துவதற்கான சிறப்புப் பாடத்திட்டம்

## தரம் 10 குடியியற் கல்வி – முதலாம் தவணை


சமூக விஞ்ஞானத் திணைக்களம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை


www.nie.lk

2022 ஆம் ஆண்டில் இழந்த காலத்திற்கான மீட்புத் திட்டம் (**Recovery Plan For Learning Loss 2022**)

தரம் 10

( தரம் 10 முதலாம் தவணைக்கு பாடவேளைகள் 12உம் இரண்டாம் மூன்றாம் தவணைகளுக்கு 18 பாடவேளைகள் வீதம் மொத்தமாக 48 பாடவேளைகளுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது )

| **தேர்ச்சி** | **தேர்ச்சி மட்டம்** | **கற்றல் பேறுகள்** | **விடய உள்ளடக்கம்** | **ஆசிரியர் வழிகாட்டியிலுள்ள செயற்பாட்டு இலக்கம்** | **பாடநூலின் பாடத்தின் இலக்கமும் தலைப்பும்** | **பாட வேளைகள்** |
|---|---|---|---|---|---|---|
| **தரம் 10 முதலாம் தவணையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கற்றல் பேறுகளும் பாடமும்** | | | | | | |
| சனநாயக ஆட்சி<br>10.1 சனநாயக மக்கள் சமூகத்தில் நற்பிரசையாகச் செயற்படுவார். | சனநாயகத்தின் இயல்பையும் வளர்ச்சியையும் நுணுகியாய்வார். | • ‘சனநாயகம்’என்பதை வரைவிலக்கணங்களினூடாக விளக்குவார்<br>• நேரடி சனநாயகத்துக்கு நேரில் சனநாயகத்திற்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை ஒப்பிடுவார் | • சனநாயக ஆட்சி முறையின் தோற்றமும் வளர்ச்சியும்<br>• நேரடி, மறைமுக பிரதிநிதித்துவம் | 10.1.1 | 01. சனநாயக ஆட்சி<br>பாடநூலில் இருந்து தேவையான பகுதியை தெரிவுசெய்க | 04 |
| | சனநாயக ஆட்சியின் பிரதான இயல்புகளைப் பகுத்தாய்வார். | • சனநாயக ஆட்சிமுறையொன்றின் இருப்பு மீது பங்களிப்புச் செய்யும் காரணிகள் செயற்படும் விதத்தை விளக்குவார் | • சனநாயக ஆட்சி முறையொன்றின் இயல்புகள் | 10.1.2 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகளையும் பிரசைக்குரிய பொறுப்புக்களையும் ஒப்பிடுவார். | • அரசு, அரசாங்கம் ஆகிய எண்ணக்கருக்களை வரைவிலக்கணங்களின் துணையுடன் விளக்குவார்.<br>• அரசினது தன்மையையும் அரசாங்கத்தினது தன்மையையும் விளக்குவார்.<br>• தேசிய அரசின் தன்மையை விளக்குவார்.<br>• ஒற்றையாட்சி மற்றும் கூட்டு அரசுகளின் அடிப்படைப் பண்புகளை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாராய்வார்.<br>• அரசாங்கத்தின் பிரதான கூறுகளையும் அவற்றின் தொழிற்பாட்டையும் விளக்குவார்.<br>• பாராளுமன்ற ஆட்சி முறைக்கும் சனாதிபதி ஆட்சி முறைக்கும் இடையிலான வேறுபாட்டில் அவற்றின் அடிப் படையான இலட்சணங்களுக்கு இடையிலான வேறுபாடு களையும் விசாரித்தறிவார்.<br>• சனநாயக மக்கள் சமூக மொன்றின் பிரசை என்ற வகையில் தமது பொறுப்புக்களை நன்கு | • அரசு, அரசாங்கம் ஆகியவற்றின் பிரதான அம்சங்கள்<br>• அரசாங்கத்தின் பிரதான கூறுகளும் அவற்றின் தொழிற்பாடுகளும்<br>• அரசின் வகிபாகம் | 10.1.3 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | விளங்கிச் செயற்படுவதன் முக்கியத்து வத்தை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார் | | | | |
| | சனநாயக இலட்சியங்களை உள்வாங்குவார். | • சனநாயக ஆட்சி வெற்றி அடைவதில் பங்களிக்கும் காரணிகளை விளக்குவார்.<br>• சமூகமொன்றின் நல்ல இருப்புக்காக சனநாயக ஆட்சிமுறை முக்கியத்தவம் பெறும் விதத்தை நுணுகி நோக்குவார். | • சனநாயக ஆட்சிமுறையொன்று வெற்றியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்<br>• சனநாயக ஆட்சியின் முக்கியத்துவம் | 10.1.4 | | 01 |
| அதிகாரத்தைப் பன்முகப் படுத்தலும் பகிர்ந்தளித்தலும் 10.2 அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் | அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்களை ஒப்பிட்டு நோக்குவார் | • ‘அதிகாரம்’ என்பது யாது என வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• அதிகாரத்தைப் பன்முகப்படுத்துதல் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்களை விளக்குவார். | • அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்கள் - அறிமுகம் | 10.2.1 | 02. அதிகாரத்தைப் பண்முகப் படுத்தலும் பகிர்ந் தளித்தலும் | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆகிய எண்ணக் கருக்கள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் அலகுகளின் கட்டமைப்புக்கள், அதிகாரங்கள் மற்றும் கருமங்களை நுணுகியாய்வார். | • அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் அலகுகளைப் பெயரிட்டு அவற்றின் அமைப்புக்களை விளக்குவார்.<br>• அதிகாரத்தைப் பன்முகப் படுத்தும் அலகுகளின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குவார்.<br>• நவீன அரசுகளில் அதிகாரத்தைப் பரவலாக்குவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை விளக்குவார் | • அதிகாரப் பன்முகப்படுத்தல் அலகுகள்<br>• மேற்படி அலகுகளின் கட்டமைப்புக்கள்<br>• மேற்படி அலகுகளின் அதிகாரங்களும் பணிகளும்<br>• தற்கால அரசுகளில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதற்கான காரணங்கள் | 10.2.2 | | 02 |
| | அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளின் கட்டமைப்புக்கள், அதிகாரங்கள் மற்றும் பணிகளை நுணுகியாய்வார். | • அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளைப் பெயரிடுவார்.<br>• அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளின் சட்ட அமைப்பை விளக்குவார்.<br>• அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளின் அதிகாரங்களையும் கருமங்களையும் நுணுகியாய்வார்.<br>• தற்கால அரசுகளில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதன் அல்லது பகிர்ந்தளிப்பதன் அவசியத்தை | • அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகள்<br>• மேற்படி அலகுகளின் கட்டமைப்புக்கள்<br>• மேற்படி அலகுகளின் அதிகாரங்களும் பணிகளும்<br>• தற்கால அரசுகளில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான காரணங்கள் | 10.2.3 | | 03 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நுணுகியாய்வார்.<br><br>• எமது நாட்டில் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அதிகாரம் பகிர்ந்தளிப்பு என்பவற்றின் வரலாற்றைத் தேடியாய்வார் | • இலங்கையில் அதிகாரப் பன்முகப்படுத்தல், அதிகாரப்பகிர்வு ஆகியவற்றின் வரலாறு | | | |
| | தற்கால அரசுகளில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் அவசியத்தை மதிப்பார் | • அமெரிக்க ஐக்கிய குடியரசு, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் அதிகாரம் பகிரப்பட்டமைக்கான காரணங்களைக் கலந்துரையாடுவார். | • தெரிவு செய்த அரசுகளின் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் | 10.2.4 | | 01 |
| மொத்தம் | | | | | | 12 |